மணிச்சுடர் 15/16.2.2011

## சிங்கப்பூரில்

# ஜமால் முஹம்மது கல்லூரி மாணவர்கள் நடத்திய பெற்றோர்களுக்கான இலவச கணிதப் பயிலரங்கு

திருச்சி, பிப்.15-

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) சென்ற 30-1-11 அன்று அதிகாரப் பூர்வமாக திறக்கப்பட்டது. கல்விச் சார்ந்த சமுதாய தொண்டு செய்வதே இச் சங்கத்தின் பிரதான நோக்க மாகும். அதன் அடிப்படையில், சென்ற 13-2-11 அன்று, பெற்றோர்களுக்கான இலவச கணிதப் பயிலரங்கு சிங்கப்பூரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவரும், 25 ஆண்டுகள் கல்வித் துறையில் அனுபவமும் பெற்ற கணிதப் பேராசிரியர் அமானுல்லா, இப் பயிலரங்கை நடத்தினார். தொடக்க நிலை மற்றும் உயர் நிலை கணிதப் பாடங்களில் பிள்ளைகள் சிறந்த மதிப் பெண்கள் றெுவதற்கு, பெற்றோர்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதற் கான வழிமுறைகள் இப் பயிலரங்கில் முன்வைக்கப் பட்டது. இக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களும், பொது மக்களும் சேர்ந்து சுமார் 100 பேர் இப் பயிலரங்கில் கலந்து பயன் பெற்றனர்.

இப் பயிலரங்கின் போது, சிங்கப்பூரின் 'ஜமால் கஜுரா' நிறுவனத் தின் தொழிலதிபரும், சமூக சேவகருமாகிய முஹம்மது ஜமால் அவர்களுக்கு, சங்கத்தின் தலைவர் முஹியத்தின் அப்துல் காதர் சங்கத்தின் சார்பாக 'சமூக சேவகர் விருது' வழங்கி கவுரவித்தார்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் 60 ஆண்டு கால கல்விச் சேவையைப் பாராட்டி, எதிர்வரு 02-5-2011 அன்று சிங்கப்பூரில் 'வைர விழா கொண்டாட்டம்' நடக்கவிருக்கிறது.